**செ.வெ. எண்: 154** **நாள்: 27.02.2012**

# <u>பத்திரிக்கை செய்திக் குறிப்பு</u>

தலைவர், ஆசிரியர் தேர்வு வாரியம், சென்னை அவர்களிடமிருந்து 1029 உடற்கல்வி ஆசிரியர்கள் பணிக்காலியிடங்களுக்கான காலியிட அறிவிக்கை பெறப்பட்டது. இப்பணிக்காலியிடங்கள் மாநில அளவில் அமைந்த 31.01.2012 அன்றைய நிலவரப்படி தகுதியுள்ள வேலைவாய்ப்பக உத்தேச பரிந்துரை பதிவு மூப்பு விவரங்களுடன், பதிவுதாரர்கள் பெயர் மற்றும் இனவாரியாகவும் { HYPERLINK "http://www.tn.gov.in" } என்கிற தமிழக அரசின் இணைய தளத்தினில் வெளியிடப்பட்டுள்ளது. மேலும், இவ்விணைய தளத்தில் மேற்கூறிய பணியிடங்களுக்கான கல்வித் தகுதி, வயது வரம்பு, இன சுழற்சி விவரங்கள் ஆகியவற்றையும் காணலாம். மேற்படி இணைய தளத்தில் மனுதாரர்கள் தங்களது பெயர் பரிந்துரை பட்டியலில் உள்ளதா என்பதை உறுதி செய்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இந்த உத்தேச பரிந்துரை பதிவு மூப்பு தேதிக்குள் தகுதியுள்ள மனுதாரர்கள் எவரும் விடுபட்டிருப்பின் அவர்கள் தாங்கள் பதிவு செய்துள்ள மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தினை உரிய ஆதாரத்துடன் 02.03.2012 தேதிக்குள் நேரில் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. 02.03.2012 தேதிக்குப் பின்னர் தொடர்பு கொள்ளும் மனுதாரர்களின் கோரிக்கை ஏதும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது எனத் தெரிவிக்கப்படுகிறது.

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**